சென்னை
செவ்வாய்
ஆகஸ்ட் 5,
2025
மாணவர் பதிப்பு

# தினமலர்

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்
www.dinamalar.com

விலை
ரூ.3/-




பட்டம்

03 • அற்புத வளைவுகள்; அற்புத ஆடிகள்!
04 • குழந்தைகளுக்கான வரலாற்றை உருவாக்கியவர்
05 • கதைக் களம்: வரம் தரும் மரம்
07 • விண்வெளியில் ஆந்தையின் கண்கள்!
08 • எது கைக்குக் கிடைத்தாலும் எதுகையா?
10 • அமெரிக்க மிரட்டல்; அடிபணியுமா இந்தியா?

# மீண்டும் டபுள் டெக்கர் பேருந்துகள்



**செ**ன்னை, மும்பை உள்ளிட்ட பெரு நகரங்களில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு டபுள் டெக்கர் பேருந்துகள் இயக்கப்பட்டன. பிறகு பல்வேறு காரணங்களால் கடந்த 2008இல் நிறுத்தப்பட்டன. தற்போது சென்னையில் வாய்ப்புள்ள இடங்களில் 'தேசிய தூய்மைக் காற்று' திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக 20 மின்சார டபுள் டெக்கர் பேருந்துகளை இந்த ஆண்டின் இறுதிக்குள் இயக்க சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது. தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் இந்தப் பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களிடையே கிடைக்கும் வரவேற்பைத் தொடர்ந்து பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதிப்புக்குரிய நட்பு நாடு இந்தியா!



**இ**ந்தியா – பிலிப்பைன்ஸ் இடையேயான தூதரக உறவு தொடங்கி 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதை முன்னிட்டு பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபர் ஃபெர்டினண்ட் மார்க்கோஸ் 5 நாள் பயணமாக இந்தியா வர உள்ளார். தனது பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு அவர் தந்த பேட்டியில் 'இந்தியா எங்கள் மதிப்புக்குரிய நட்பு நாடு. இந்தியப் பிரதமரைச் சந்தித்து அவர்களுடனான உறவுகளைப் பலப்படுத்துவதன் மூலம் எங்கள் நாட்டின் உணவுப் பாதுகாப்பு, மருத்துவம், டிஜிட்டல் தொழில்நுட்பம், வர்த்தகம், விவசாயம், சுற்றுலா முதலிய பல துறைகள் பயனடையும்' என்று கூறியுள்ளார்.

# மூன்றாவது இடத்துக்கு முன்னேறிய இந்தியா

**க**டந்த 2024ஆம் ஆண்டு மட்டும் இந்தியாவில் 18,900 உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடந்துள்ளன. இதன் மூலம் இந்தச் சிகிச்சையை அதிகமாகச் செய்யும் உலக நாடுகளில் அமெரிக்கா, சீனா ஆகியவற்றுக்கு அடுத்து மூன்றாவது இடத்துக்கு இந்தியா முன்னேறி உள்ளது. மேலும், நமது நாட்டில், 3.3 லட்சம் பேர், தங்கள் உறுப்புகளைத் தானமாகக் கொடுப்பதற்காகத் தாமாக முன்வந்து உறுதியளித்துள்ளனர். உறுப்பு தானம் பற்றியுள்ள பல்வேறு தப்பான கருத்துகள் களையப்பட்டு வருகின்றன. சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா இந்த விவரங்களைத் தெரிவித்தார்.



# உடற்கல்வி பாடப்புத்தகம் வெளியீடு



**த**மிழ்நாட்டில் முதல்முறையாகப் பள்ளிக் கல்வித்துறை சார்பில் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்காக உடற்கல்வி பாடப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் உடற்கல்விக்குப் போதிய புத்தகங்கள் இல்லை. அதனால் 2025ஆம் ஆண்டிற்கான புதிய பாடத்திட்டத்தின் கீழ் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உடற்கல்வியை எவ்வாறு கற்றுக் கொடுப்பது என்று வழிகாட்டும் 237 பக்கங்களைக் கொண்ட உடற்கல்வி நூலை, சாம்ராஜ் தலைமையிலான குழு தயாரித்துள்ளது.

# Idukki schools hold a 'no textbook' class

In Idukki, students in 487 schools now get a 'no textbook' class every Friday during the first period to discuss issues and topics not covered in textbooks. The class is part of the ILIVE (Integrated Learning for Inner Values and Empowerment) life skills development programme launched by the Idukki district administration to help children become not just literate, but also resilient, reflective and responsible members of society. The project, a brainchild of former Idukki District Collector V Vigneswari, was planned and executed by a four member team of MSW students. The weekly sessions include activities such as storytelling, drawing, discussions, games and reflections to engage students meaningfully.



தினமலர் அலுவலக நேரம்: காலை 9:30 – மாலை 6:00 மணி

★ 58B, கண்ணப்பன் தெரு, சின்ன காஞ்சிபுரம்–631 501 044 - 2723 4224

★ பிளாட் எண் 66, 2வது குறுக்குத்தெரு, அய்யனார் அவென்யூ, திருவள்ளூர்–602 001 044 - 2766 3129

DINAMALAR-National Tamil Daily e-mail: dmrcni@dinamalar.in
Edited, Printed and Published by Dr.K.Ramasubbu, on behalf of Dinamalar at New Standard Press, T.V.R. House, Medavakkam, Chennai - 600 100

Administrative Office: 39, Whites Road, Chennai-600 014.
Advt e-mail: dmrae@dinamalar.in Ph 044 - 2854 0001 - 03

Joint Managing Editor Dr.R.Lakshmipathy RNI No.33618/79

பட்டம்

பொறுப்பாசிரியர்: ஆர்.வெங்கடேஷ். ஆசிரியர் குழு: ரமேஷ் வைத்யா, இ.எஸ்.லலிதாமதி, ம.பா.காந்திராமன், எஸ்.மைதிலி, பா.வெங்கடேஷ், எஸ்.நித்தியானந்தம்.
வடிவமைப்பு: பா.ஸ்டீபன், த.கார்த்திகேயன். ஓவியங்கள்: ஈ.பிரகாஷ்.

முகவரி : பட்டம், தினமலர், 69, திரு.வி.க. ஹைரோடு, ராயப்பேட்டை, சென்னை– 600 014.
மின்னஞ்சல் : pattam@dinamalar.in தொலைபேசி : 98410 53881.

திங்கள் முதல் வெள்ளி வரை பள்ளிகளுக்கு மொத்தமாக வரவழைக்க, சந்தா விவரங்களுக்கு
சென்னை : 98843 91342 | 99443 09681 | 97511 36644

# அற்புத வளைவுகள்; அற்புத ஆடிகள்!

சமதளக் கண்ணாடியில் முகம் பார்த்திருப்பீர்கள். முகத்தில் இருப்பதை அது காட்டும்.

ஆனால், வளைந்த பரப்பில் உள்ள கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பாருங்கள். ஸ்பூன்களில் உள்ளபடி, ஒருபுறம் உங்கள் முகம் தலைகீழாகவும், மறுபுறம் நிமிர்ந்தும் சிறியதாகவும் தெரியும்.

இதற்கு என்ன காரணம்?

கோளக ஆடிகள் செய்யும் ஒளி எதிரொளிப்பு மாயை இது!

### கோளக ஆடிகள்

இவை ஒரு கோளத்தின் *(Hollow sphere)* ஒரு பகுதியாக வெட்டி எடுக்கப்பட்டு, அதன் ஒரு பரப்பில் வெள்ளி பூசப்பட்ட ஆடிகள் ஆகும். சமதள ஆடிகளைப் போல இவை தட்டையாக இல்லாமல், வளைந்த எதிரொளிக்கும் பரப்பைக் கொண்டிருக்கும். இந்த வளைந்த பரப்பே இவற்றின் தனித்துவமான பண்புகளுக்குக் காரணமாகும்.

ஒளியானது இந்த வளைந்த பரப்பில் படும்போது, அது எதிரொளித்தல் விதியின்படி எதிரொளிக்கிறது. இந்தத் தன்மையைப் பொறுத்து, கோளக ஆடிகள் இரண்டு முக்கிய வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

### கோளக ஆடிகளின் வகைகள்

#### 1. குழி ஆடி [Concave Mirror]

ஒரு கோளத்தின் உள்புறம், அதாவது குழிவான பகுதி, எதிரொளிக்கும் பரப்பாக செயல்பட்டால் (மறுபக்கம் வெள்ளி பூசப்பட்டு இருக்கும்) அது குழி ஆடி எனப்படும். இதன் முக்கியப் பண்பு, தன் மீது படும் இணையான ஒளிக்கற்றைகளை ஓரிடத்தில் குவிப்பதாகும். அதனால் இது 'குவிக்கும் ஆடி' *(Converging Mirror)* என்றும் அழைக்கப்படுகிறது.

**பிம்பத்தின் தன்மை:** பொருளின் நிலையைப் பொறுத்து, குழி ஆடியானது மெய் பிம்பத்தையும் *(Real Image)* உருவாக்க வல்லது, மாய பிம்பத்தையும் *(Virtual Image)* உருவாக்க வல்லது. பிம்பங்கள் பொருளை விட சிறியதாகவோ, பெரியதாகவோ அல்லது சம அளவிலோ இருக்கலாம்.



#### 2. குவி ஆடி [Convex Mirror]

ஒரு கோளத்தின் வெளிப்புறம், அதாவது மேடான பகுதி, எதிரொளிக்கும் பரப்பாக செயல்பட்டால் அது குவி ஆடி எனப்படும். இது தன் மீது படும் இணையான ஒளிக்கற்றைகளை விரிவடையச் செய்யும். எனவே, இது 'விரிக்கும் ஆடி' *(Diverging Mirror)* என்று அழைக்கப்படுகிறது.

**பிம்பத்தின் தன்மை:** குவி ஆடியானது எப்போதுமே ஒரு நேரான, மாய மற்றும் பொருளை விடச் சிறிய பிம்பத்தை மட்டுமே உருவாக்கும்.



### பயன்கள்

கோளக ஆடிகளின் குவிக்கும் மற்றும் விரிக்கும் தன்மைகள், அவற்றை நம் அன்றாட வாழ்விலும், உயர் தொழில்நுட்பத்திலும் இன்றியமையாதவை ஆக்குகின்றன.

### குழி ஆடியின் பயன்கள்

- முகத்தை அருகே கொண்டு செல்லும்போது, பெரிதாக்கப்பட்ட, நேரான மாய பிம்பத்தை உருவாக்குவதால், ஒப்பனை செய்யவும், சவரம் செய்யவும் இவை உதவுகின்றன.
- பற்களின் உட்பகுதியைப் பெரிதாகக் காண, பல் மருத்துவர்கள் சிறிய குழி ஆடிகளைப் பயன்படுத்துகின்றனர்.



- விளக்கின் குமிழ், குழி ஆடியின் குவியத்தில் *(Focus)* வைக்கப்படுவதால், அதிலிருந்து வரும் ஒளி, நீண்ட தூரம் பயணிக்கும் இணையான கற்றைகளாக எதிரொளிக்கப்படுகிறது.
- சூரிய ஒளியை ஒரு புள்ளியில் குவித்து, அதிக வெப்பத்தை உருவாக்கிச் சமைக்க உதவுகிறது.
- பிரபஞ்சத்தில் உள்ள தொலைதூர விண்மீன்கள் மற்றும் கோள்களிலிருந்து வரும் ஒளியைச் சேகரித்துக் குவிக்க, பெரிய குழி ஆடிகள் பயன்படுத்தப்படுகின்றன.

### குவி ஆடியின் பயன்கள்

- பரந்த பார்வையை குவி ஆடி வழங்குகிறது. இது ஓட்டுநருக்குப் பின்னால் வரும் பரந்த சாலையையும், அதிக வாகனங்களையும் காண உதவுகிறது. இவற்றில் *'Objects in mirror are closer than they appear'* (ஆடியில் தோன்றும் பொருட்கள் தோன்றுவதை விட அருகில் உள்ளன) என்று எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.
- அங்காடிகள், வங்கிகள் மற்றும் ஏ.டி.எம் மையங்கள் போன்ற பகுதியைக் கண்காணிக்க இவை பாதுகாப்பு நோக்கங்களுக்காகப் பொருத்தப்படுகின்றன.
- மலைப்பாதைகளின் அபாயகரமான வளைவுகளில், எதிரே வரும் வாகனங்களைப் பார்க்க இவை நிறுவப்படுகின்றன.

ஓர் எளிய வளைந்த கண்ணாடிப் பரப்பிற்குள் இவ்வளவு பெரிய அறிவியல் அடங்கியிருப்பது ஆச்சரியமளிக்கிறது.

குழி ஆடியும் குவி ஆடியும் வெறும் பிம்பங்களை உருவாக்குபவை மட்டுமல்ல; அவை ஒளியை நம் விருப்பப்படி வளைத்து கையாள உதவுகின்றன.

வாகனங்களில் நமது பாதுகாப்பை உறுதி செய்வதில் இருந்து, பிரபஞ்சத்தின் ரகசியங்களை நமக்குக் காட்டும் தொலைநோக்கிகள் வரை, கோளக ஆடிகளின் பங்களிப்பு மகத்தானது.



அறிவியலின் அடிப்படைக் கொள்கைகள் எவ்வாறு மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்குத் துணை நிற்கின்றன என்பதற்குக் கோளக ஆடிகளின் கதை ஒரு சிறந்த சான்றாகும்!

– பெர்ஜின்

## கோளக ஆடிகள் கண்டுபிடிப்பின் வரலாறு!

கண்ணாடிகளின் வரலாறு பழமையானது. பொ.யு.மு.6000இல் கூட, எரிமலைப் பாறைகளைக் கொண்டு செய்யப்பட்ட கண்ணாடிகளை மனிதன் பயன்படுத்தினான். ஆனால், வளைந்த பரப்புகளில் ஒளி எதிரொளிக்கும் தத்துவத்தைப் பற்றிய முறையான ஆய்வு, பிற்காலத்தில் தான் தொடங்கியது.

கிரேக்கக் கணிதவியலாளரான யூக்ளிட் [Euclid], ஒளி நேர்கோட்டில் பயணம் செய்கிறது மற்றும் சமதள, கோளக ஆடிகளின் எதிரொளிப்பு விதிகளைப் பற்றி எழுதியிருந்தார்.

ஆர்க்கிமிடிஸ் [Archimedes] குழி ஆடிகளைக் கொண்டு சூரிய ஒளியைக் குவித்து ரோமானியக் கப்பல்களை எரித்ததாக ஒரு புராணக்கதை உண்டு. இது குழி ஆடியின் குவிக்கும் தன்மையை அவர்கள் அறிந்திருந்ததைக் காட்டுகிறது.

கி.பி.11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரேபிய விஞ்ஞானி இபின் அல்ஹய்தம் [Ibn alHaytham], நவீன ஒளியியலின் தந்தை என்று போற்றப்படுகிறார். இவர் எழுதிய "Book of Optics" என்ற நூலில், கோளக மற்றும் பரவளைய ஆடிகளின் பண்புகளைக் கணிதவியல் ரீதியாக மிகத் துல்லியமாக விளக்கினார். குவிக்கும் மற்றும் விரிக்கும் ஆடிகளின் செயல்பாடுகளை அவர் விரிவாக ஆராய்ந்தார்.

19ஆம் நூற்றாண்டில், ஜெர்மன் வேதியியலாளர் ஜஸ்டஸ் வான் லீபிக் [Justus von Liebig], கண்ணாடியின் மீது வெள்ளி பூசும் செயல்முறையைக் கண்டுபிடித்தார். இது உயர்தரமான, தெளிவான கோளக ஆடிகளை மலிவாக உற்பத்தி செய்ய வழிவகுத்தது.



சூரிய ஒளியைக் குவித்து அழிக்கப்பட்ட கப்பல்

இந்தக் கண்டுபிடிப்புக்குப் பின்னரே, கோளக ஆடிகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பயன்பாடுகள் வெகுவாகப் பெருகின.

# குழந்தைகளுக்கான வரலாற்றை உருவாக்கியவர்

ஒரு தொலைக்காட்சியில் குழந்தைகள் நிகழ்ச்சி ஓடிக்கொண்டிருந்தது. குழந்தைகளிடம் ராமாயணத்தின் கதாநாயகன் ராமரின் தாயார் பெயர் என்ன? (கோசலை) என்று கேட்டார்கள். குழந்தைகளுக்குப் பதில் தெரியவில்லை. அதே நிகழ்ச்சியில் கிரேக்கக் கடவுளர்களைப்பற்றிச் சில கேள்விகள் கேட்கப்பட்டன. அதற்கெல்லாம் அந்தக் குழந்தைகள் சட்டென்று பதிலளித்தார்கள். ஆனால், இந்தியக் கடவுளைப் பற்றிய ஒரு கேள்விக்கு அவர்களால் பதிலளிக்க இயலவில்லை. இதன் பொருள், அவர்களுக்கு இந்தியாவின் வரலாறு, பண்பாடு, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களைப் பற்றி அவ்வளவாகத் தெரியவில்லை. நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த அனந்த் பை (*Anant Pai*) என்பவர், இதைப்பற்றி சிந்தித்தார். இதற்குக் குழந்தைகள் மட்டும் காரணம் அல்ல என்று புரிந்துகொண்டார். அதற்கான நடவடிக்கைகளில் அவர் இறங்கினார். அவர் செய்த செயல்கள் குறித்து இங்கே கேள்வி பதில் வடிவத்தில் பார்க்கலாம்.




சித்ர கதாவின் சில முகப்பு அட்டைகள்.

### இந்தியக் குழந்தைகளுக்கு இந்தியாவைப் பற்றித் தெரியாததற்கு அனந்த் பை கண்டறிந்த உண்மை என்ன?

1960களில் இந்தியாவைப் பற்றிய சிறுவர் நூல்கள் மிகக் குறைவாகவும், எளிதில் படிக்க முடியாதபடியும் இருந்தன. நம் குழந்தைகளுக்கு இந்தியாவை எளிமையாகச் சொல்லித்தரும் படைப்புகள் இல்லாததே இதற்குக் காரணம் என்று அனந்த் பை புரிந்துகொண்டார்.

### இந்தப் பிரச்னைக்கு அனந்த் பை கண்டறிந்த தீர்வு என்ன?

இந்தியா சார்ந்த பல்வேறு தலைப்புகளில் குழந்தைகளுக்கு எளிமையாகவும் சுவையாகவும் அறிமுகப்படுத்தும் படக்கதைப் புத்தகங்களின் வரிசையை உருவாக்க வேண்டும் என்று அனந்த் பை முடிவு செய்தார்.



அனந்த் பை

### அனந்த் பையின் முடிவுக்கு முதலில் ஆர்வம் காட்டியவர் யார்?

தொடர் முயற்சிகளுக்குப் பிறகு, இந்தியா புக் ஹவுஸ் (*IBH*) என்ற நிறுவனத்தைச் சேர்ந்த மிர்சந்தானி என்பவர் அனந்த் பையின் யோசனைக்கு ஆர்வம் காட்டினார். படக்கதைப் புத்தகங்கள் உருவாக்க சம்மதம் தெரிவித்தார்.

### 'அமர் சித்ர கதா' வரிசையை உருவாக்குவதில் அனந்த் பை சந்தித்த சவால்கள் என்னென்ன?

சிறுவர்களுக்கான படக்கதைகளை உருவாக்குவது மிகவும் கடினமான வேலையாக இருந்தது. நிறையப் படிக்க வேண்டியிருந்தது. அதைச் சுவையாக எழுத வேண்டியிருந்தது. காட்சிகளை அழகாகவும் தெளிவாகவும் வரையும் ஓவியர்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. புத்தகங்களைச் சிறப்பாக அச்சிட்டு இந்தியா முழுவதும் கொண்டு சேர்க்க வேண்டியிருந்தது.

### 'அமர் சித்ர கதா' எப்போது தொடங்கப்பட்டது, அதன் நோக்கம் என்ன?

1960களின் பிற்பகுதியில் அனந்த் பை 'அமர் சித்ர கதா' வரிசையை உருவாக்கினார். இந்தியக் குழந்தைகள் இந்தியாவைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கம்.

### 'அமர் சித்ர கதா' வரிசையில் என்னென்ன வகையான கதைகள் வெளியாகியுள்ளன?

இந்தியக் கடவுளர்கள், வரலாற்று ஆளுமைகள், அறிவியலாளர்கள், தொழிலதிபர்கள், விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள் என்று பலருடைய கதைகள் மிகச் சுவையாக எழுதப்பட்டு இந்த வரிசையில் வெளியாகியுள்ளன.

### 'அமர் சித்ர கதா' நூல்கள் தற்போது எந்த வடிவங்களில் கிடைக்கின்றன?

அமர் சித்ர கதா நூல்கள் தமிழ் உள்ளிட்ட பல மொழிகளிலும் வெளியாகியுள்ளன. மேலும், இணையம், செல்பேசி போன்ற புதிய தொழில்நுட்ப வடிவங்களிலும் கிடைக்கின்றன. புதிய தலைப்புகள் தொடர்ந்து சேர்க்கப்படுகின்றன.

**– என். சொக்கன்**

# அடையாள முத்திரைகள்



மோதிர முத்திரை



எழுத்துடன் கூடிய மோதிரம்



சிந்துவெளி முத்திரை

அரசர்கள் காலத்தில் ஒருவர் கொண்டு வரும் பொருளின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய, முத்திரைகள் பயன்படுத்தப்பட்டன. முத்திரைகள் மோதிரங்களாகவும், அச்சுகளாகவும் இருந்தன. மன்னருடைய அலுவலர்கள், அடையாளங்களுக்காக முத்திரைகளை மோதிரங்களாகப் பயன்படுத்தினர். பண்டைய வர்த்தகத்தில், போக்குவரத்து பரிவர்த்தனைகளின் போது, பொருட்களை அங்கீகரிக்கவும் இவை பயன்படுத்தப்பட்டன.

சிந்து சமவெளி நாகரிகத்தின் துறைமுக நகரமான லோதலிலும் இது போன்ற முத்திரைகளைக் கண்டெடுத்தனர். தனிநபர்களை அடையாளம் காணவும், சொத்துக்களை அடையாளப்படுத்தவும், முத்திரைகள் பயன்படுத்தப்பட்டன. இனக்குழுக்களின் தலைவர்கள், மன்னர்கள், வணிகர்களிடம் இது இருந்தது.

தங்கம், வெள்ளி, வெண்கலத்தில் இவை செய்யப்பட்டன. மரங்கள், பறவைகள், விலங்குகள் முத்திரைகளில் இருந்தன.

**– மதுரை வீரன்**

# தமிழ் காசு



இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆக்கிரமித்து, ஆட்சி செய்தது போல், தமிழகத்துக்கு அருகில் உள்ள புதுச்சேரியைப் பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சி செய்தனர். அவர்கள் ஆட்சியின் போது தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்களை வர்த்தகத்திற்காக வெளியிட்டனர்.

பொ.யு. 1720–1835ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டக் காலத்தில், படத்தில் உள்ள காசு வெளியிடப்பட்டுள்ளது. இது ஒரு செப்புக் காசு.

நாணயத்தின் ஒரு பக்கம் 'புதுச்சேரி' என்று மூன்று வரிகளில் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது.

# வரம் தரும் மரம்

நாட்டுப்புறக் கதை

ராஜஸ்தான் மாநிலத்தின் தார் பாலைவனம். முன்னொரு காலத்தில் நடந்த கதை இது. அந்தப் பாலைவனத்தின் வழியே ஒரு பயணி நடந்துகொண்டு இருந்தான். தனியாகப் போகும் பயணி.

சூடான மணல் பரப்பில் பல மைல்கள் நடந்துவிட்டான். களைப்பு. தாகமாக இருந்தது. பசி வேறு. நடக்க முடியவில்லை. ஓய்ந்துபோய் நின்றான். கிராமமோ ஒதுங்குவதற்கு நிழலோ கண்ணுக்கு எட்டிய தொலைவில் தென்படவில்லை.

‘ஒரு நல்ல மரம் இங்கே இருந்தால் நிழலில் கொஞ்சம் ஓய்வெடுப்பேன்’ என்று நினைத்தான். அட, அவன் பக்கத்தில் ஒரு பெரிய பசுமையான மரம் தோன்றியது. திடுக்கிட்டான். ஆனாலும், அதன் நிழலில் அமர்ந்தான். மரம் அசைந்தது. குளுகுளு காற்று. ‘ஆஹா, இப்போது தாகம் தீர்க்க குளிர்ந்த நீர் கிடைத்தால் நன்றாக இருக்குமே’ என்று நினைத்தான். என்ன ஆச்சரியம்! அவன் அருகே ஒரு மண் பானை இருந்தது. உள்ளே குளிர்ந்த, தெளிந்த நீர்!

பானையை அப்படியே தூக்கினான், ஆர்வத்தொடு. ‘மடமடமட...’ ஒன்றுமில்லை. அவன் நீர் அருந்தும் சத்தம்தான் அது. ‘ஆஹா... வெறும் தண்ணீர்தான். ஆனால், என்ன சுவை, என்ன சுவை!’

சில நிமிடங்களிலேயே அவனுக்கு அடுத்த எண்ணம் தோன்றியது. ‘தாகம் தீர்ந்தது. பசி? அதை அடக்க, சுவையான உணவு வேண்டுமே...’

ஆம், நீங்கள் நினைத்த மாதிரிதான் நடந்தது. அவனுக்கு எதிரே பெரிய தட்டு தோன்றியது. அதில் விதவிதமான உணவுப் பண்டங்கள் உருவாயின. காற்றில் எங்கும் அறுசுவையின் நறுமணம்.

எவ்வளவு முடியுமோ அவ்வளவு சாப்பிட்டான். அள்ளி அள்ளி விழுங்கினான். அடாடா... அடாடா... என்ன சுவை!

வயிறு நிறைந்தால் அடுத்தது என்ன? சுகமான தூக்கம் வந்தது அவனுக்கு. மர நிழல் குளிர்ந்தாலும், கட்டாந்தரையாக இருக்கிறதே... ‘இங்கே ஒரு கட்டிலும் அதில் உடலுக்குச் சுகமான மெத்தையும் இருந்தால் எப்படி இருக்கும்...’ என்று எண்ணினான்.

அதேதான்...

அங்கே ஓர் அருமையான மஞ்சம் தோன்றியது. ஆசையாக ஏறிப் படுத்தான். கண்களை மூடி, குளிர்ந்த தென்றலையும், இதம் தரும் மெத்தையின் சுகத்தையும் அனுபவித்தான். அப்படியே கண் அயர்ந்துவிட்டான்.

முதலில் அவன் ஓய்ந்து போய் நின்ற இடத்தின் கீழே ஒரு மரம் புதைந்திருந்தது. அது கற்பக மரம். விரும்பியதை எல்லாம் கொடுக்கும் தன்மை அந்த மரத்துக்கு இருந்தது. இது புராணக் கதைகளில் வரும் கற்பனை மரம். கதைகளுக்குச் சுவை கூட்ட இந்தக் கற்பனைகள் தான் எவ்வளவு உதவுகின்றன! அந்த மரத்தின் அருகில் இருந்து ஆசைப் பட்டதால்தான் அவன் நினைத்தவை எல்லாம் நடந்தன.

நிம்மதியாகத் தூங்கியவன், சிறிது நேரம் கழித்துக் கண் விழித்தான். அவன் களைப்பெல்லாம் பறந்தோடி இருந்தது. புத்துணர்ச்சியோடு இருந்தான்.

சிறிது நேரத்துக்கு முன், பசியாலும் தாகத்தாலும் வாடி இருந்தவன், களைப்பினால் சிந்திக்கும் திறன் குறைந்தவனாக இருந்தான். இப்போதோ, ஆரோக்கியமாக இருந்தான். அதனால் அவனது சிந்திக்கும் திறன் கூர்மை பெற்றிருந்தது. ஏதேதோ எண்ணம் இட ஆரம்பித்தான்.



‘நடந்தவை எல்லாம் உண்மை தானா? இப்படி எல்லாம் நடக்குமா? இது ஒரு பாலைவனம். புல் பூண்டு கூட இல்லாத மணல் பிரதேசம். ஆனால், இங்கே எப்படி இவ்வளவு பெரிய மரம் திடீரென வந்தது? அழகான பானையில் குளிர்ந்த நீர் வந்தது எப்படி? அரண்மனை விருந்துக்குத் தயாரித்தது போன்ற உணவுப் பொருட்கள் எங்கிருந்து தோன்றின? இவற்றின் பின்னால் ஏதோ ஒரு மந்திர சக்தி இருக்க வேண்டும். அது என்ன?’

இப்படி எல்லாம் கேள்விகள் அவன் மனத்தில் எழுந்தன.

எல்லா சுகங்களும் கிடைத்தால், மனித மனம் என்னென்னவோ நினைக்கும் அல்லவா... அந்த இயல்பின் படி அவன் மனத்தில் இன்னோர் எண்ணமும் தோன்றியது. ‘நாம் ஆசைப்பட்டதெல்லாம் நடந்தது, கேட்டதெல்லாம் கிடைத்தது. அதே போல கெட்டதும் நடக்கும் இல்லையா? இப்போது இங்கே ஒரு பேய் என்னைப் பிடித்துத் தின்னத் தயாராக வந்தால்...’ என்று நினைத்தான்.

அவ்வளவுதான்.

பெரிய காற்று அடித்தது. அந்த மரம் தலைவிரித்து ஆடியது. அவன் முன்னால் பெரிய பேய் ஒன்று வந்து நின்றது. பெரிய, கரிய கைகளை நீட்டிக்கொண்டு அவன் மேல் பாய வந்தது. “டேய் முட்டாளே... எனக்கு இரையாகத் தயாராக இரு. நான் இப்போது உன்னை விழுங்கப் போகிறேன்” என்று கத்தியபடியே அவனை நெருங்கியது.

ஐயையோ...

நடுங்கியபடியே, ‘கடவுளே... டக்குனு இந்தப் பேய் வந்த மாதிரியே மறைஞ்சு போயிடாதா...? நான் தப்பிச்சுட மாட்டேனா?’ என்று கத்தினான்.

அவ்வளவுதான்.

அந்தப் பேய் மறைந்துவிட்டது.

பயந்தது பயந்தபடி நின்றிருந்தான் அந்தப் பயணி.

எல்லாம் கனவா? ஏதேதோ நடந்துவிட்டதே...

‘இனி நாம் என்ன நினைத்தாலும் நல்லதை மட்டுமே நினைக்க வேண்டும்’ என்று நினைத்தபடி தன் பயணத்தைத் தொடர்ந்தான் அந்தப் பயணி.

# தெருப் புகைப்படம்: நிஜத்தின் நிழல்கள்!



**புகைப்படக்கலை 9**

தெருப் புகைப்படக்கலை (Street Photography) என்பது, பொது இடங்களில், அன்றாட வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களை நேரடியாகப் படம் பிடிக்கும் ஒரு வகையாகும். இத்தகையப் புகைப்படங்கள், பல சுவாரசியமான தகவல்களை நமக்குச் சொல்லாமல் சொல்கின்றன.

**தெருப் புகைப்படத்தின் முக்கியமான அம்சங்கள்:**


- தெருப் புகைப்படங்கள், மக்களையும், அவர்களின் இயற்கையான சூழலையும் விவரிக்கும்.
- மக்களின் உருவங்கள் மட்டுமன்றி, நிழல்கள், பயன்படுத்திய பொருட்களைப் படமாக்கி, அவர்களின் பண்புநலன்களை விளக்கும்.
- இந்தப் புகைப்படங்களைப் பார்க்கும்போது, சம்பவங்கள் கதை போல் விரியக்கூடும்.
- முற்றிலும் மாறுபட்ட இரு அம்சங்களை, ஒரே படத்தில் தருவதும் இந்த வகையில் உண்டு.
- பார்த்தவுடன் சிரிப்பை வரவழைக்கும் படங்களும், இந்த வகையில் அடங்கும்.
- உண்மைத் தன்மை மாறாமலும், எதையும் மிகைப்படுத்தாமலும் புகைப்படங்கள் இருக்கும்.
- ஒளியையும் நிழலையும் கச்சிதமாகப் பயன்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கும்.

**தெருப் புகைப்படக்கலையின் விதிமுறைகள்:**

- புகைப்படம் எடுக்கப்படுபவரின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையில் இருக்கக்கூடாது.
- ஏழ்மையையோ அல்லது ஒருவரின் பரிதாபத்தையோ படமாக எடுத்து, அதன்மூலம் வருவாய் ஈட்ட நினைக்கக்கூடாது.
- படம் எடுக்கப்படுபவரை எந்த விதத்திலும் துன்புறுத்தவோ, மன உளைச்சல் ஏற்படுத்தவோ கூடாது.
- ஒருவரின் அந்தரங்கமான தருணங்களைப் படமாக்கக் கூடாது.
- படம் எடுக்கும் நோக்கம் நேர்மையானதாக இருக்க வேண்டும்.
- சம்பந்தப்பட்டவர்கள் கேட்டுக் கொண்டால், புகைப்படத்தை உடனடியாக நீக்கிவிட வேண்டும்.
- தொழில் நேர்த்தியைவிட, எடுக்கப்படும் படம் விவரிக்கும் நிகழ்ச்சிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.







**தொடர் பயிற்சி அவசியம்!**

தெருப் புகைப்படக் கலைக்கு அடிப்படை விதி ஒன்றுதான். நீங்கள் எடுத்த புகைப்படத்தில், நீங்கள் இருந்தால் எப்படி உணர்வீர்களோ அதற்கேற்ப நடப்பது நல்லது. இந்த வகையில் சிறப்பான புகைப்படங்கள் எடுக்க, தொடர் பயிற்சி அவசியம்.

அதன்பிறகு, அவரவருக்கே உரிய தனிப் பாணியை உருவாக்கிக் கொள்ளலாம். நாம் எடுக்கும் புகைப்படத்தின் தரத்தை மேம்படுத்த, சில மென்பொருட்கள் உள்ளன; அவற்றையும் கற்றுக்கொண்டு சிறப்பான புகைப்படங்களை உருவாக்கலாம்.

**- ஆர்.லதா**

# சோஷியல் மீடியா மார்க்கெட்டிங்!



**சந்தைப்படுத்தல் 9**

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி, நம் தயாரிப்புகள் அல்லது சேவைகளை விளம்பரப்படுத்துவதே, சோஷியல் மீடியா மார்க்கெட்டிங் (Social Media Marketing).

இன்றைய டிஜிட்டல் உலகில், கோடிக்கணக்கான மக்கள் சமூக வலைத்தளங்களில் நேரத்தைச் செலவிடுகிறார்கள். எனவே, தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களை அடைய, சமூக ஊடகம் ஒரு சக்தி வாய்ந்த தளமாக அமைகிறது.

**சமூக ஊடகச் சந்தையின் நன்மைகள்:**

- தயாரிப்புகளை அதிகமான மக்களுக்கு அறிமுகப்படுத்தலாம்.
- பதிவுகள் மூலம், மக்களை உங்கள் தளத்திற்கு ஈர்க்கலாம்.
- வாடிக்கையாளருடன் நேரடியாக உரையாடி, கருத்துகளைப் பெறலாம்.
- தயாரிப்புகளை விளம்பரப்படுத்தி, விற்பனையைத் தூண்டலாம்.
- பழைய விளம்பர முறைகளை விட குறைந்த செலவில், அதிக மக்களை அடையலாம்.
- போட்டியாளர்களின் உத்திகள், செயல்பாடுகளையும் அறியலாம்.




**சமூக ஊடகச் சந்தைப்படுத்தல் சிறக்க:**

- குறிப்பிட்ட தயாரிப்புகளை, யார் அதிகம் விரும்புவார்கள் என்பதை, முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.
- எந்தச் சமூக வலைத்தளத்திற்கு அதிக பார்வையாளர்கள் உள்ளனர் என்பதை ஆராய்ந்து, அந்தத் தளங்களில் கவனம் செலுத்த வேண்டும்.
- ஈர்க்கக்கூடிய படங்கள், வீடியோக்கள், பிற உள்ளடக்கங்களை உருவாக்க வேண்டும்.
- அவரவர்களின் சமூக ஊடகப் பக்கங்களை, தொழில் செய்வோர் சுறுசுறுப்பாக வைத்திருக்க வேண்டும்.
- பார்வையாளர்களின் கருத்துகளுக்கும், கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும்.
- சமூக வலைத்தளங்கள் வழங்கும் கட்டண விளம்பர விருப்பங்களைப் பயன்படுத்தி, பார்வையாளர்களை அடைய வேண்டும்.

சமூக ஊடகச் சந்தைப்படுத்துதல் என்பது, ஒரு தொடர்ச்சியான செயல்முறை. இதில் சரியான திட்டமிடல், தொடர்ச்சியான முயற்சிகள் மூலம், பெரும் வணிக வளர்ச்சியை அடையலாம்.


**- சாய்நந்தன்**

# விண்வெளியில் ஆந்தையின் கண்கள்!

உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த தொலைநோக்கிகளில் ஒன்றான ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி *(James Webb Space Telescope)*, மிக அரிதான, அழகான ஓர் அமைப்பைக் கண்டுபிடித்தது. அதை விஞ்ஞானிகள் 'காஸ்மிக் ஆந்தை' *(Cosmic Owl)* என்று அழைக்கிறார்கள்.

**ஏன் இந்தப் பெயர்?**

ஆந்தையின் இரண்டு ஒளிரும் கண்களைப் போல இது காட்சியளிக்கிறது. பார்க்கவே மிகவும் அழகாக இருக்கிறது. ஆனால், இது உண்மையில் இரண்டு பெரிய விண்மீன் மண்டலங்கள் *(Galaxies)* ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதன் விளைவாகும். இந்த மோதல் தோராயமாக 3 கோடியே 80 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருந்தாலும், இப்போதுதான் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி இதை நமக்குக் காட்டியுள்ளது.


'காஸ்மிக் ஆந்தை'

விண்மீன் மண்டலங்கள் என்பவை கோடிக்கணக்கான நட்சத்திரங்கள், வாயுக்கள், தூசுகள் நிறைந்த மிகப்பெரிய தொகுப்புகளாகும். இந்த இரண்டு விண்மீன் மண்டலங்கள் ஒன்றையொன்று நெருங்கும் போது, அவற்றின் ஈர்ப்பு விசை *(Gravitational Force)* தீவிரமாக இருக்கும். இதனால் அதன் உள்ளே இருக்கும் நட்சத்திரங்களும், வாயுக்களும், தூசுகளும் ஒரு குறிப்பிட்ட வடிவத்திற்குள் இழுக்கப்படுகின்றன. இதன் விளைவாகத் தான் இந்த 'காஸ்மிக் ஆந்தையின்' கண்கள் போன்ற வடிவம் உருவாகிறது. இது பார்ப்பதற்கு ஓர் ஓவியம் போல அழகாக இருக்கிறது.


**ஏன் இது மிகவும் அரிதானது?**

விண்வெளியில் விண்மீன் மண்டலங்கள் மோதுவது நடக்கக்கூடிய ஒன்றுதான். ஆனால், இப்படி ஒரு தெளிவான, ஆந்தையின் கண்கள் போன்ற வடிவம் உருவாவது மிகவும் அரிதானது. அதனால் தான் இந்தக் கண்டுபிடிப்பு ஒரு சாதனையாகப் பார்க்கப்படுகிறது. இந்த அரிய கண்டுபிடிப்பின் மூலம், விண்வெளியின் ரகசியங்களை மேலும் ஆழமாகத் தெரிந்துகொள்ள முடியும்.

**- தியா**

# காலியாக இருப்பதன் காரணம்!

ஆஸ்திரேலியா உலகின் ஆறாவது பெரிய நாடாக இருந்தாலும், அதன் பெரும்பாலான நிலப்பரப்பு காலியாகவே உள்ளது. தமிழ்நாட்டை விட 59 மடங்கு பெரியதாக இருந்தபோதிலும், மக்கள்தொகையில் தமிழ்நாடு ஆஸ்திரேலியாவை விட 2.6 மடங்கு அதிகம். இதற்கு என்ன காரணம்?



அதிகமான மக்கள் வாழும் இடங்கள்




**வறட்சி**

ஆஸ்திரேலியாவில் தோராயமாக 70 சதவீதம் நிலப்பரப்பு பாலைவனமாகவோ, அரைப் பாலைவனமாகவோ உள்ளது. இங்கு கடுமையான வறண்ட சூழ்நிலை நிலவுவதால் விவசாயம் செய்ய முடியாது. பெரும்பாலான ஆறுகள், கோடைக் காலங்களில், வறண்டு காணப்படுகின்றன. இதனால் குடிநீர்ப் பற்றாக்குறை, விவசாயத்திற்கான நீர்ப்பாசன வசதிகள் குறைவாகவே உள்ளன.

**மழை இல்லை**

ஆஸ்திரேலியா அன்டார்டிகாவிற்கு அருகில் இருப்பதால், குளிர்ந்த கடல் நீரை ஆவியாக்கும் அளவுக்கு வெப்பம் இங்கு இல்லை. இதனால் மேற்குப் பகுதிகளில் மழை மேகங்கள் உருவாவது மிகவும் அரிது. அதன் விளைவாக மழைப்பொழிவு குறைவு. கிழக்குப் பகுதியில் உள்ள கிரேட் டிவைடிங் ரேஞ்ச் *(Great Dividing Range)* மலைத்தொடர், மழை மேகங்கள் உள்பகுதிகளுக்குள் வருவதைத் தடுக்கிறது. இதனால் உள்பகுதிகளில் மழைப்பொழிவு மிகக் குறைவாகவே உள்ளது.

**குடியேற்றம்**

பிரிட்டிஷ்காரர்கள் 1700களில் ஆஸ்திரேலியாவிற்குள் நுழைந்தபோது, அவர்கள் வளமான மண், நீர், துறைமுகங்கள் கொண்ட கடற்கரைப் பகுதிகளிலேயே குடியேறத் தொடங்கினர். உள் பகுதிகள் வறண்ட பாலைவனமாக இருந்ததால், அங்கு யாரும் குடியேற முயலவில்லை.

1800களில் தங்கச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டபோது மக்கள்தொகை அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் அதுவும் பெரும்பாலும் கடற்கரைப் பகுதிகளிலேயே நிகழ்ந்தது.

முதலாம், இரண்டாம் உலகப் போர்களுக்குப் பிறகு, ஆஸ்திரேலியா தனது மக்கள்தொகையை அதிகரிக்க ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் இருந்து மக்களைக் குடியேற ஊக்குவித்தது. இவர்களும் பெரும்பாலும் கடற்கரைப் பகுதிகளையே தேர்வு செய்தனர்.

இந்தக் காரணங்களால், ஆஸ்திரேலியாவின் பெரும்பாலான மக்கள் கடற்கரையிலிருந்து 50 கிலோமீட்டர் தூரத்திற்குள் வசிக்கின்றனர். மத்திய, உள்பகுதிகளில் மக்கள் தொகை மிகக் குறைவாகவே உள்ளது.

**எதிர்கால சவால்கள்**

2050ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் மக்கள்தொகை 3.6 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலே சொன்ன சவால்களைச் சமாளித்து மக்கள்தொகையை அதிகரிப்பது ஆஸ்திரேலியாவிற்கு ஒரு பெரிய சவாலாக இருக்கும்.

**– குகன்**

## அது எது?

**1. சூரிய மண்டலத்தில், பூமிக்கு வெளியே உள்ள ஒரு பாலைவனம்.**

இது சிவப்பு நிறத்தில் இருப்பதால் 'சிவப்புப் பாலைவனம்' என அழைக்கப்படுகிறது.

**எது அது?**

**2. உலகின் மிக வறண்ட பாலைவனம்.**

இந்தப் பாலைவனத்தில் சில பகுதிகளில் பல நூறு ஆண்டுகளாக மழைப்பொழிவு பதிவாகவில்லை.

**அது எது?**

**3. பூமியில் உள்ள மிகப் பெரிய பாலைவனங்களில் ஒன்று.**

மணலால் ஆனதல்ல. மாறாக, பனி, பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ளது.


**அது எது?**

**விடைகள்**
1. செவ்வாய்
2. சிலி நாட்டின் அட்டகாமா பாலைவனம்
3. அண்டார்டிகா

# எது கைக்குக் கிடைத்தாலும் எதுகையா?

'யாப்பு இலக்கணத்தில் தொடை என்ற ஒன்று வருகிறதே, அப்படி என்றால் என்ன?' என்று ஆசிரியரிடம் கேட்டான் சரணவன்.

'பூவைத் தொடுக்க நார் முக்கியம். அதுபோல, செய்யுள் இயற்ற தொடை முக்கியம்' என்று தொடங்கினார் ஆசிரியர். மரபுக்கவிதை எழுதுவதற்குச் சில ஒழுங்குகள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் தொடை. 'தொடுத்தல்' என்பதிலிருந்து 'தொடை' என்னும் சொல் பிறந்திருக்கலாம். ஓசை ஒழுங்கோடு தொடுக்கப்படுவதால் இதை முன்னோர் தொடை எனக் குறித்தனர்.



செய்யுள் உறுப்பாகிய தொடை எட்டு வகைப்படும். அவை: மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண், இரட்டை, அந்தாதி, செந்தொடை ஆகியன.

"இப்போதைக்கு, எதுகைத்தொடை பற்றி மட்டும் விளக்கமாகச் சொல்வீர்களா ஐயா?" என்று கேட்டான் சரவணன்.

"பாடலில் இரண்டாவது எழுத்து அடிகள் தோறும் ஒன்றுபோல வருவது எதுகைத் தொடை" என்றார் ஆசிரியர்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்**

இந்தத் திருக்குறளில் இரு வகை எதுகைத் தொடைகள் வந்துள்ளன. அதாவது ஒரே அடியில் அடுத்தடுத்த சீர்களில் இரண்டாவது எழுத்து ஒன்றுபோலப் பொருந்தி வந்தால் அதனைச் 'சீர் எதுகை' என்பர். உதாரணம்: நீந்துவர், நீந்தார்.

அடுத்தடுத்த அடிகளில் உள்ள சீர்களில் இரண்டாவது எழுத்து ஒன்றுபோல வந்தால் அதனை 'அடி எதுகை' என்கிறோம். உதாரணம்: பிறவி, இறைவன்.

எதுகை வரும்போது ஒரே எழுத்தே இரண்டாவதாக வரவேண்டும் என்ற அவசியம் இல்லை. அந்த எழுத்துக்குரிய இன எழுத்தும் (அ, ஆ) வரிசை எழுத்தும் (க, கா) வரலாம். அப்படித்தான் பிறவி, இறைவன் என்ற சொற்களில் எதுகைத் தொடை வந்துள்ளது.

"ஓசை நயத்துக்காகவும், நினைவில் வைத்துக் கொள்வதற்காகவும் எதுகை உதவுகிறது" என்றார் ஆசிரியர்.

– சு.ர.

# காப்பியம்தான் ஆனால் காப்பியம் இல்லை...

**அனிதா:** நானும் இன்று பாடம் கேட்கும்வரை **தொல்காப்பியத்தைக்** காப்பியம் என்றுதான் நினைத்திருந்தேன். ஆசிரியர் சொல்லித்தான் அது இலக்கணநூல் என்று தெரிந்தது.

**ஜோதி:** நான் விடுப்பு எடுத்த நாளில் சொல்லியிருக்கிறார். வேறு என்ன சொன்னார்?

**அனிதா:** தமிழில் இன்று நமக்கும் கிடைக்கிற முதல் இலக்கண நூல், தொல்காப்பியம். எழுதியவர், தொல்காப்பியர்.

**ஜோதி:** தொல்காப்பியர் எழுதியதால் தொல்காப்பியமா, இல்லை, தொல்காப்பியத்தை எழுதியதால் தொல்காப்பியரா?

**அனிதா:** திருவள்ளுவர் எழுதியதால், திருக்குறளுக்குத் 'திருவள்ளுவம்' என்று ஒரு பெயர் உண்டு, அதுபோலத்தான் இதுவும்.

**ஜோதி:** தொல்காப்பியத்தில் என்னவெல்லாம் இருக்கிறது?

**அனிதா:** தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் இயல்கள் என்ற உட்பிரிவுகள் உண்டு.

**ஜோதி:** ஒவ்வோர் அதிகாரத்திலும் எதைப் பற்றிப் பேசுகிறார்?

**அனிதா:** எழுத்து என்றால் என்ன? அவை எவ்வாறு பிறக்கின்றன? அந்த எழுத்துகள் எப்படிப் பிற எழுத்துகளுடன் சேர்கின்றன... இதையெல்லாம் சொல்வது எழுத்ததிகாரம்.

சொல்லதிகாரத்தில் சொற்கள் என்றால் என்ன? அந்தச் சொற்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன? அதற்கான இலக்கணங்கள் என்ன? என்பவை வரும். பொருளதிகாரம்தான் வித்தியாசமானது. நம் முன்னோர்களின் வாழ்க்கை பற்றி இதில் விரிவாக எழுதியிருக்கிறார் தொல்காப்பியர். களவு, கற்பு என்று இரண்டாகப் பிரித்து நம் முன்னோரின் இல்லற வாழ்க்கையை நுட்பமாக எழுதியிருப்பதாக ஆசிரியர் கூறினார்.



**ஜோதி:** அகத்திணை, புறத்திணை ரெண்டும் வந்துவிடுகிறது, இல்லையா?

**அனிதா:** ஆம். திணை என்பதற்கு ஒழுக்கம் என்றொரு பொருளும் இருக்கிறது. தமிழர்களின் அந்தக் காலப் போர் அறத்தை இந்தப் பகுதியில் சொல்லியிருக்கிறார்.

**ஜோதி:** அப்ப தொல்காப்பியம், நம்முடைய அக வாழ்க்கை முறை, போர் வாழ்க்கை முறை என அனைத்தையும் கூறும் இலக்கண நூல். அப்படித்தானே?

– சுப்பிரமணி இரமேஷ்

## சொல்லைக் கண்டுபிடியுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அ | அ | அ | அ | ● |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**சொ**ல் வேட்டை ஆட வாருங்கள்.

இதற்கு ஆயுதம் வேண்டாம். அறிவு போதும். அதுதான் உங்களிடம் ஏராளமாக இருக்கிறதே...

மேலே 'அ அ அ அ .' என்று தரப்பட்டுள்ளது.

கீழே உள்ள காலிக் கட்டங்களில் நீங்கள் பொருத்தமான சொற்களை எழுத வேண்டும்.

அ என்பதன் கீழ், அ என்னும் எழுத்து இருக்கலாம், அல்லது க, ங, ச எனத் தொடங்கும் 'அ' என்னும் உயிரெழுத்தோடு கூடிய உயிர்மெய் எழுத்துகளில் ஒன்றை எழுதலாம். கடைசி எழுத்தாக, புள்ளி எழுத்தான மெய்யெழுத்து வரும்.

எடுத்துக்காட்டுக்கு ஒன்று. 'அ அ அ அ .' என்பதற்கு 'ந வ ர ச ம்' என்று வரும்.

உங்களுக்கு உதவியாகச் சிறிய குறிப்புகளும் உள்ளது. பயன்படுத்தி சொல் வேட்டை ஆடுங்கள்.

1. நிதானம் அல்ல
2. நவமணிகளில் பச்சை நிறத்தில் உள்ளது
3. சமாதானம் அல்ல
4. மகிழ்ச்சியின் உச்சக் கட்டம்.
5. விளையாட்டுப் போட்டிகளில் ஒரு வகை.

**விடைகள்**

1. அவசரம் 2. மரகதம் 3. கலவரம்
4. பரவசம் 5. தடகளம்

**விளையாட்டு!**

# படிக்கட்டுகளில் வேகமாக ஓடுவதும் போட்டியே!

பெரிய கட்டடங்களில் இருக்கும் படிக்கட்டுகள் மூலம் வேகமாக ஏறி, உயரத்தை அடைவதுதான், கோபுர ஓட்டம் *(Tower Running)* எனப்படும், டவர் ரன்னிங் போட்டி. இதற்கு, வெர்டிகல் *(Vertical)* ரன்னிங், ஸ்டேர் *(Stair)* ரன்னிங் என்ற பெயர்களும் உண்டு.




### டவர் ரன்னிங்கில் வகைகள்!

**1. ஸ்ப்ரின்ட் (Sprint):** வீரர்களின் வயது மற்றும் உடல்நிலை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, ஏறிக் கடக்க வேண்டிய உயரம் குறைவாக இருக்கும்.

**2. குவார்ட்டர் – மைல் பந்தயங்கள் (Quarter mile laps):** முந்தைய போட்டிகளை விடச் சற்று அதிகமான உயரத்தைக் கடக்க வேண்டி இருக்கும்.

**3. ஃபுல் மைல் பந்தயம் (Fullmile laps):** நல்ல உடல்திறன் மிக்கவருக்கும், மன வலிமை உடையவருக்குமான, அதிக உயரம் கடக்கும் பந்தயம் இது.

**விதிமுறைகள் என்ன?**

படிக்கட்டுகளில் உள்ள இடவசதியைப் பொறுத்து, வீரர்கள் அனைவரும் ஒன்றாகவோ அல்லது தனித் தனியாகவோ படிகளில் ஏறிச் செல்லும் வகையில் போட்டி இருக்கும். ஏற வேண்டிய தளங்கள் அல்லது படிக்கட்டுகளின் எண்ணிக்கையே, போட்டியின் இலக்கு.

போட்டி நடப்பதற்கு முன்பாக, படிகள் வழுக்காமல் இருப்பதும், கைப்பிடிகள் உறுதியாக உள்ளதும் உறுதி செய்யப்படும். ஒவ்வொரு தளங்களிலும், வழிகளில் கண்காணிப்பாளர்கள் நிறுத்தப்படுவர்.

உடன் ஏறும் சக போட்டியாளருக்கு இடையூறு செய்யும் போட்டியாளர்கள், தகுதி நீக்கம் செய்யப்படுவர். ஒவ்வொருவரின் நேரத்தையும் கணித்து, முதலில் இலக்கை அடைந்தவரே வெற்றியாளராக அறிவிக்கப்படுவார்.

**பிரபலமானது எப்படி?**

- 1960ஆம் ஆண்டுகளில், உலகின் பல இடங்களிலும், டவர் ரன்னிங் போட்டிகள் நடக்க ஆரம்பித்தன.
- உயரமான கட்டடங்கள் உருவாக ஆரம்பித்த 1970–80களில், அவற்றில் ஏறும் போட்டிகளும் புழக்கத்துக்கு வந்தன.
- டவர் ரன்னிங் விளையாட்டை மேம்படுத்த, சர்வதேச டவர் ரன்னிங் அசோசியேஷன் (ITRA) நிறுவப்பட்டது.
- 2010களில், சர்வதேச சாம்பியன்ஷிப் போட்டிகளாலும், ஊடகங்கள் இந்த விளையாட்டுக்குத் தரும் முக்கியத்துவத்தாலும், தற்போது பல இடங்களிலும், டவர் ரன்னிங் போட்டிகள் நடக்கின்றன.

**பந்தயங்கள்:**

- அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள, 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்' எனும் கட்டடத்தில், ஆண்டுதோறும் டவர் ரன்னிங் போட்டி நடக்கிறது.
- பிரான்சின் பாரிஸ் நகரில், புகழ்பெற்ற ஈஃபில் கோபுரத்தின் வெளிப்புறப் படிக்கட்டுகளில் நடத்தப்படுகிறது.
- தைவானில் உள்ள தைபெய்யில், 101 தளங்கள் கொண்ட கட்டடத்தில், இந்தப் போட்டி நடக்கிறது.
- மலேசியாவின் கோலாலம்பூரில், உலகின் இரண்டாவது உயரமான கட்டடமான, 'மெர்டெகா 118'இல், வரும் ஆகஸ்ட் 30இல், 'தி ஸ்கை ரேஸ்' என்ற பெயரில், போட்டி நடக்க உள்ளது.
- இந்தியாவில், டவர் ரன்னிங் போட்டி இன்னும் பிரபலமாகவில்லை. எனினும், கோவா, மும்பை, கோல்கட்டா ஆகிய பகுதிகளில், சில போட்டிகள் நடத்தப்பட்டு உள்ளன.

**- ஜி.வி.ரிதன்யா**

## வீரர்கள்



**சோஹ் வாய் சிங்** *[Soh Wai Ching]* எனும் மலேசிய டவர் ரன்னிங் வீரர், 2024ஆம் ஆண்டு தைவானில் நடந்த, 'தைபெய் 101' போட்டியில், உலக சாம்பியன் ஆனார்.





ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஆண்ட்ரியா மேயர் *[Andrea Mayr]*, **பியோட்ர் லோபோட்சின்ஸ்கி** *[Piotr obodzi ski]* என்ற போலந்து வீரர்களும், டவர் ரன்னிங்கில் உலக சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள்.

**உடற்பயிற்சி!**

# தோள் மூட்டுகளுக்குச் சிறந்த வார்ம் – அப்!

டைனமிக் ஆர்ம் சர்க்கிள் *(Dynamic Arm Circles)* என்பது, ஒரு சிறந்த வார்ம் – அப் *(warm – up)* பயிற்சியாகும். இது, உங்கள் கைகள் மற்றும் தோள்பட்டைகளைத் தயார் செய்து, எந்தவொரு உடற்பயிற்சிக்கும் ஏற்றதாக மாற்றுகிறது.

**எப்படி எப்படி?**

**ஆரம்ப நிலை:**

- நேராக நின்று, கால்களைத் தோள்பட்டை அகலத்திற்கு வைத்துக் கொள்ளுங்கள்.
- உள்ளங்கைகள் கீழ் அல்லது முன்னோக்கி பார்க்கும் வகையில், கைகளை இரு பக்கமும் நேராக நீட்டுங்கள்.
- முழங்கைகளை லேசாக வளைத்து வைக்கவும்.
- வயிற்றுப் பகுதி தசைகளைச் சற்று இறுக்கமாக வைத்து, உடலை நிலையாக வையுங்கள்.



**பயிற்சி 1 முன்னோக்கிய வட்டம் [Forward Circle]:**

- கைகளை ஒரே நேரத்தில், முன்னோக்கி சிறிய வட்டங்களில் சுழற்றத் தொடங்குங்கள்.
- முதலில் சிறிய வட்டங்களாக ஆரம்பித்து, தோள்பட்டைகள் வார்ம் அப் ஆக ஆக, பெரிய வட்டங்களாக மாற்றுங்கள்.
- கைகளைக் கட்டுப்பாடில்லாமல் சுழற்றுவதைத் தவிர்க்கவும்.


**பயிற்சி 2 பின்னோக்கிய வட்டம் [Backward Circle]:**

- வட்டங்களின் திசையை மாற்றி, உங்கள் கைகளைப் பின்னோக்கி *(backward)* சுழற்றத் தொடங்குங்கள்.
- சிறிய வட்டங்களில் தொடங்கி, பெரிய வட்டங்களாக மாற்றுங்கள்.
- மென்மையான அசைவுகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

**நேரம்:** இந்தப் பயிற்சிகளை, 10 – 20 முறை அல்லது 20 – 30 வினாடிகள் வரை தினசரி செய்யலாம்.

**கவனிக்க வேண்டியவை:**

- கைகளையும் தோள்பட்டைகளையும் மட்டுமே அசைக்க வேண்டும். உடல் அசைவைத் தவிர்க்கவும்.
- ஏதேனும் அசௌகரியம் இருந்தால், பயிற்சி செய்வதை உடனடியாக நிறுத்துங்கள்.
- பயிற்சி முழுவதும் இயல்பாகச் சுவாசிக்கலாம்.



**நன்மைகள்:**

- தோள் மூட்டுகளுக்கும் தசைகளுக்கும் ரத்த ஓட்டத்தை அதிகரித்து, உடற்பயிற்சிகளுக்கு அவற்றைத் தயார் செய்கிறது.
- தசைகளை வார்ம் – அப் செய்வதன் மூலம், தசைப்பிடிப்பு மற்றும் பிற காயங்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது.
- மென்மையான அசைவுகளால், தோள்பட்டை பகுதியில் ஏற்படும் லேசான வலிகள் குறையும்.
- மேல் முதுகு மற்றும் தோள்பட்டை தசைகளைச் செயல்படுத்துவதன் மூலம், ஒட்டுமொத்த தோற்றத்தையும் மேம்படுத்தலாம்.
- சீரான அசைவுகள், தியானம் போன்ற ஓர் அனுபவத்தை அளித்து, மேல் உடல் பாகங்களில் ஏற்படும் இறுக்கத்தைப் போக்குகிறது.

# அமெரிக்க மிரட்டல்; அடிபணியுமா இந்தியா?

தற்போது அனைவராலும் பேசப்படும் ஒரு விஷயம், இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம். இன்று நாளை என்று தள்ளிப் போய்க் கொண்டிருக்கும் இந்த ஒப்பந்தம் ஆகஸ்ட் மாத முடிவிற்குள் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதைப்பற்றிய தெளிவு இன்னும் ஏற்படாததால் அமெரிக்கா ஆகஸ்ட் ஒன்றாம் தேதியிலிருந்து நம் நாட்டிலிருந்து அங்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறது. அது தற்போது ஆகஸ்ட் 7 வரை ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது.

தவிர, ரஷ்யாவிலிருந்து நாம் கச்சா எண்ணெய், பாதுகாப்புத் தளவாடங்கள் போன்றவற்றை வாங்குவதால், அபராதம் ஒன்றும் விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்திருக்கிறார். அபராதம் எவ்வளவு கூடுதல் வரியாக இருக்கும் என்பது பற்றிய தெளிவு இல்லை.

### பாதிப்புகள்

இந்த 25 சதவீத வரியால் நமது நாட்டின் ஏற்றுமதித் துறை கடுமையாகப் பாதிக்கப்படும் என்று தெரிகிறது. ஆட்டோமொபைல்கள், ஆட்டோ உதிரி பாகங்கள், எஃகு, அலுமினியம், ஸ்மார்ட்போன்கள், சூரிய பேனல்கள், கடல்சார் பொருட்கள், ரத்தினங்கள், நகைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு விவசாயப் பொருட்கள் அனைத்தும் இந்த 25 சதவீத இறக்குமதி வரிப் பட்டியலில் உள்ளன.



இருப்பினும், மருந்துகள், குறைக்கடத்திகள் (செமிகண்டக்டர்கள்), முக்கியமான தாதுக்கள் ஆகியவை இந்த வரியில் இருந்து விலக்கப்பட்டுள்ளன.

அருகில் இருக்கும் நாடுகளோடு ஒப்பிடும்போது, 25 சதவீத வரி என்பது, நமது ஏற்றுமதிகளைக் கணிசமாகப் பாதிக்கும். குறிப்பாக, பாகிஸ்தான், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி விகிதம் குறைவு என்பதால், அங்கேயிருந்து பொருட்கள் அதிக அளவில் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும். பல முதலீட்டாளர்கள் அந்த நாடுகளுக்கு நகர்ந்துவிடுவர்.

### தாக்கம்

இந்த 25 சதவீத வரியானது, நமது பொருளாதாரத்தில் 'மிகக் குறைந்த' தாக்கத்தையே ஏற்படுத்தும் என்று அரசுத் துறை அமைப்புகள் தெரிவிக்கின்றன. அதாவது ஜி.டி.பி. எனப்படும் நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 0.2 முதல் 0.5 சதவீத அளவுக்குக் குறையக்கூடும். இதனை நமது நாட்டினால் சமாளிக்க முடியும் என்றும் கருதப்படுகிறது.

அதேசமயம், நமது நாடு, விவசாயம், பால் பொருட்களுக்கான சந்தைகளை அமெரிக்காவுக்குத் திறந்துவிடாது. மாட்டிறைச்சி மற்றும் 'அசைவ பால்' ஆகியவற்றின் இறக்குமதியை அனுமதிக்காது.

### அணுகுமுறை

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் அணுகுமுறை எப்போதும் அவசரமானது. முதலில் கடுமையாக ஓங்கித் தாக்குவார். எதிரே இருக்கும் நாடு, தன்னுடைய கட்டுப்பாடுகளைத் தளர்த்திக்கொண்டு, அமெரிக்கா கேட்பதைக் கொடுக்க முன்வரும். அதேபோன்ற உத்தியைத் தான் இப்போதும் இந்தியா விஷயத்தில் டிரம்ப் பயன்படுத்துவதாக பொருளாதார அறிஞர்கள் கருதுகிறார்கள்.

அமெரிக்காவுக்கு இந்திய சந்தை வேண்டும். இங்கே தமது பொருட்களைக் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கான வசதி செய்துதரப்பட வேண்டும் என்று அந்த நாடு விரும்புகிறது. நமது நாடு, நமது விவசாயிகளையும் உள்ளூர் தொழில்களையும் பாதுகாப்பதோடு, முடிந்தவரை அமெரிக்காவுக்குச் சந்தையைத் திறந்துவிடவும் தயாராகவே இருக்கிறது.

இருதரப்பும் உட்கார்ந்து பேசி, இறுதித் தீர்வை விரைவில் எட்டும் என்ற நம்பிக்கையைப் பல தொழில்துறை வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள்.

– லதா ரகுநாதன்

---

## அமெரிக்கா – இந்தியா:

# வரியைப் புரிந்துகொள்வோம்




1. **இந்தியா மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்துள்ள வரி எவ்வளவு?**
   அ. 20%　ஆ. 25%
   இ. 15%　ஈ. 10%

2. **இந்த இறக்குமதி வரி எப்போது முதல் அமலுக்கு வரும்?**
   அ. ஆகஸ்ட் 1, 2025
   ஆ. ஆகஸ்ட் 7, 2025
   இ. ஆகஸ்ட் 10, 2025
   ஈ. ஆகஸ்ட் 9, 2025

3. **இறக்குமதி வரியினால் அதிகம் பாதிக்கப்படும் துறைகள்?**
   அ. பால், தயிர், மோர்
   ஆ. மின்னணு சாதனங்கள், மருந்துகள், ரத்தினங்கள், ஜவுளி
   இ. மது பானங்கள்
   ஈ. சோப்பு, சீப்பு, கண்ணாடி

4. **நமது அருகில் இருக்கும் ஜப்பான், தென் கொரியா, வியட்நாம் ஆகியவற்றின் மீது முறையே எத்தனை சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது?**
   அ. 10 %, 5 %, 2 %
   ஆ. 15 %, 15%, 20 %
   இ. 10 %, 15 %, 12 %
   ஈ. 5 %, 15%, 25 %

5. **பதிலடி கொடுக்கும் விதமாக, இந்தியா, அமெரிக்க பொருட்களின் மீது வரி விதிக்க முடியுமா?**
   அ. முடியாது
   ஆ. முடியும்
   இ. யோசிக்கலாம்
   ஈ. யோசிக்கவே முடியாது.

விடைகள்: 1. ஆ, 2. ஆ, 3. ஆ, 4. ஆ, 5. ஆ

**செய்தி:** பழங்குடி கிராமங்களை மேம்படுத்தும் திட்டம்

# 63,000 கிராமங்கள், ஒரே லட்சியம்!

கடந்த 2024இல், காந்தி ஜெயந்தி அன்று மத்திய அரசு ஒரு பிரமாண்டமான திட்டத்தைத் தொடங்கியது. அதுதான் பிரதமரின் பழங்குடியின கிராம மேம்பாட்டு திட்டம் (PMJUGA). கிட்டத்தட்ட 63,000 பழங்குடியின கிராமங்களில் வாழும் 5 கோடிக்கும் அதிகமான மக்களின் வாழ்க்கையை மாற்றும் மத்திய அரசின் மிகப்பெரிய முன்னெடுப்பு இது. குறைந்தபட்சம் 50 சதவீத பழங்குடியினராவது வசிக்கும் கிராமங்கள் மட்டுமே இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் தனித்துவம், 17 மத்திய அமைச்சகங்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதுதான். நிதி, தரவுகள், திட்டச் செயலாக்கம் என அனைத்தையும் ஒருங்கிணைத்து, வீடு, சுகாதாரம், கல்வி, வாழ்வாதாரம், சாலை வசதி போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். இது பழங்குடியினரின் தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.




திட்டம் தொடங்கியதிலிருந்து இதுவரை, 24 லட்சம் வன உரிமைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, ஒரு கோடிக்கும் அதிகமான மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புள்ளிவிவரங்கள் அசத்தலாக இருக்கின்றன என்பதை தாண்டிப் பார்த்தால், இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம், நியாயமானது. நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்ட பழங்குடியினரின் கண்ணியத்தை நிலைநாட்டி, நீடித்த மாற்றத்தைக் கொண்டு வருவதே பிரதமரின் பழங்குடியின கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் இலக்கு. கிராமம் கிராமமாக, இந்தியா சமத்துவத்தையும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் அடையும் பயணத்தில் இந்தத் திட்டம் ஒரு திருப்புமுனையாக இருக்கும்.

**செய்தி:** யு.பி.ஐ. பயன்பாடு அதிகரிப்பு

# இந்திய டிஜிட்டல் பரிவர்த்தனையில் புதிய பாய்ச்சல்!

இந்தியாவின் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை, புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. யு.பி.ஐ. எனப்படும் 'ஒருங்கிணைந்த பணப் பரிமாற்ற இடைமுகம்' (யுனைடெட் பேமென்ட்ஸ் இன்டர்ஃபேஸ்) மூலம் 2025 ஜூன் மாதத்தில் மட்டும் 1,839 கோடி பரிவர்த்தனைகள் நடந்துள்ளன. இதன் மதிப்பு ₹24.03 லட்சம் கோடி. இது கடந்த ஆண்டு, இதே மாதத்தைவிட 32 சதவீதம் அதிகம். இந்தியாவின் யு.பி.ஐ., சீனா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளை விஞ்சி, உலகின் முன்னணி நிகழ்நேர பணப் பரிமாற்ற முறையாக உருவெடுத்துள்ளது.




யு.பி.ஐ. என்பது ஒரு பொது டிஜிட்டல் தளமாகச் செயல்படுகிறது. இது 49.10 கோடி பயனர்கள், 6.50 கோடி வணிகர்கள் மற்றும் 675 வங்கிகளை ஒரே ஒருங்கிணைந்த தளத்தில் இணைக்கிறது. இந்தியாவின் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளில் 85 சதவீதமும், உலகின் நிகழ்நேர பரிவர்த்தனைகளில் பாதிக்கு மேலும், யு.பி.ஐ. மூலம் நடக்கின்றன.

இந்தியாவின் சொந்த தொழில்நுட்பங்களான 'ஜன் தன்' கணக்குகள், ஆதார் மற்றும் 5ஜி மொபைல் சேவை ஆகியவற்றின் அடிப்படையில், இந்தியாவிலேயே, இந்தியர்களுக்காக உருவாக்கப்பட்டது இந்த யு.பி.ஐ. சேவை. இது பழைய பணப் பரிமாற்ற முறைகளைத் தாண்டி, நிதிச் சேவையின் அடிப்படை விதிகளை மாற்றியமைத்துள்ளது. செம்மையாகச் செயல்படும் இந்தச் சேவை, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியது. இதை பல நாடுகள் பின்பற்றுகின்றன. இதனால், இந்தியா, பணப் பரிமாற்றத்திற்கான இலக்கணத்தை உலகிற்கே வகுத்துக் கொடுத்துள்ளது.

**செய்தி:** தேசியக் கல்விக் கொள்கை அமலாகி 5 ஆண்டுகள்

# என்.இ.பி.: என்ன முன்னேற்றம்?

தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 தொடங்கப்பட்டபோது, இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிந்தைய கல்வி வரலாற்றில் இது ஒரு முக்கிய தருணமாகப் பாராட்டப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அது எவ்வாறு முன்னேற்றம் கண்டுள்ளது?

- இந்தியா முழுவதும் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டாலும், 28 மாநிலங்களில் 16 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்கள் மட்டுமே 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் என்.இ.பி.ஐயை நடைமுறைப்படுத்தியுள்ளன.
- அடிப்படை எழுத்தறிவு மிஷன் (FLN) என்ற அளவீட்டில், 2025க்குள் 3ஆம் வகுப்பில் எழுத்தறிவு 100 சதவீதம் எட்டப்பட வேண்டும் என்பது இலக்கு. ஆனால், அரசுப் பள்ளிகளில் படிக்கும் 3ஆம் வகுப்பு மாணவர்களில் 48 சதவீதம் பேர் மட்டுமே வயதுக்கேற்ற வாசிப்பு நிலைகளைப் பெற்றுள்ளனர்.



**பலன்கள்:**

1. பள்ளி பாடத்திட்டம் மெதுவாக மாறி வருகிறது. 10+2 என்ற முந்தைய முறை, தொடக்க கல்வி (வகுப்பு 2 வரை), ஆயத்தக் கல்வி (வகுப்புகள் 3–5), நடுநிலை (6–8) மற்றும் இடைநிலை (9–12) எனப் புதிய கட்டமைப்பால் மாற்றப்பட்டுள்ளது.
2. 2023ஆம் ஆண்டில், பள்ளிக் கல்விக்கான தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பு (NCFSE), ஒவ்வொரு கட்டத்திற்கும் கற்றல் விளைவுகளையும் திறன்களையும் வகுத்துள்ளது.
3. 2021இல் தொடங்கப்பட்ட நிபுன் பாரத் (NIPUN) திட்டத்தின் படி, ஒவ்வொரு குழந்தையும் 3ஆம் வகுப்பு முடிவதற்குள் அடிப்படைக் கணிதத்தைப் படிக்கவும் தீர்க்கவும் முடிய வேண்டும். சமீபத்திய அரசாங்க கணக்கெடுப்பின்படி, இதில் 60 சதவீத அளவுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

# எங்கே, எப்போது? ஆடவர் செஸ் உலகக் கோப்பை போட்டி!

கடந்த மாதம் மகளிர் செஸ் உலகக் கோப்பை போட்டி ஜார்ஜியாவில் உள்ள படுமி நகரில் நடைபெற்று முடிந்தது. 107 பேர் கலந்துகொண்ட போட்டியில், இறுதி ஆட்டத்தில் இரண்டு இந்திய வீராங்கனைகள் மோதினார்கள். அவர்கள் திவ்யா தேஷ்முக் (19), கொனேரு ஹம்பி (38).

பரிசு இந்தியாவுக்குத் தான் என்பது உறுதியானது. இருந்தாலும், இளம் வீராங்கனையான திவ்யா தேஷ்முக் போட்டியில் வென்றார்.

இது ஒருபுறம் நமக்கு இப்போது மகிழ்ச்சியைக் கொடுக்கும் வேளையில், மேலும் ஒரு மகிழ்ச்சி செய்தியை நமக்கு உலக செஸ் கூட்டமைப்பான பிடே (FIDE) அறிவித்துள்ளது.

ஆடவர் செஸ் உலகக் கோப்பை போட்டியை இந்தியாவில் நடத்த முடிவெடுத்துள்ளது!

139 ஆண்டுகால செஸ் உலகக் கோப்பை வரலாற்றில், இந்தியாவில் இந்தப் போட்டி நடத்தப்படுவது இதுவே முதல்முறையாகும்.

இந்தியாவில் வரும் அக்டோபர் 30ஆம் தேதி முதல் நவம்பர் 27ஆம் தேதி வரை இந்தப் போட்டிகள் நடைபெற இருக்கின்றன. இதில் உலக நாடுகளைச் சேர்ந்த 206 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை செஸ் உலகக்கோப்பை போட்டி நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டே இந்தியா பரிசை வென்றிருக்க வேண்டியது. ஜஸ்ட் மிஸ்ஸாகிவிட்டது!




அசர்பைஜானில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பிரக்ஞானந்தா, நார்வே நாட்டைச் சேர்ந்த கார்ல்சனிடம் தோற்றார். இந்த முறை அப்படி நடக்காது என்று நம்பலாம்!




எமில் சுடோவ்ஸ்கை

2025 உலக செஸ் உலகக் கோப்பை தொடருக்குத் தற்போது இந்தியாவின் சார்பில் உலக செஸ் சாம்பியன் குகேஷ், பிரக்ஞானந்தா, அர்ஜுன் எரிகைசி, அரவிந்த் சிதம்பரம் ஆகியோர் தேர்வாகி உள்ளனர்.

### இந்தியாவில் செஸ்!

இந்தியாவில் செஸ் போட்டி நடப்பது குறித்து, உலக செஸ் கூட்டமைப்பின் செயல் தலைவர் எமில் சுடோவ்ஸ்கை கூறுகையில்,

"செஸ் விளையாட்டில் அதிக ஆர்வமும், ஆதரவும் அளிக்கக் கூடிய இந்திய நாட்டில் இந்த முறை செஸ் உலகக் கோப்பை நடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்திய செஸ் ரசிகர்கள் பெரும் உற்சாகத்துடன் உள்ளார்கள். இந்தியாவில் எந்தெந்த நகரங்களில் ஆட்டங்கள் நடைபெறும் என்ற தகவல் விரைவில் தெரிவிக்கப்படும்." என்றார்.

இந்த நிலையில், சொந்த நாட்டில் நடைபெறும் ஆட்டத்தில் இந்திய வீரர்கள் சாம்பியன் பட்டம் வெல்வார்களா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## வீழ்த்தும் வழி எது?

1. இப்போது நகர்த்த வேண்டியது வெள்ளை அணி.

இரண்டே நகர்த்தலில் கறுப்பு அணியை வீழ்த்த வழி உள்ளது.

எந்த காய்களை எங்கு வைத்தால் அது சாத்தியம்?



2. கறுப்பு அணி நகர்த்தும் தருணம் இது. வெள்ளை ராஜாவை செக்மேட் செய்து வெற்றிப்பெற வேண்டும். குறைந்த நகர்த்தல்களில் எப்படி செக்மேட் செய்யலாம்?



உங்கள் பதிலைத் தெரிவிக்க வேண்டிய இமெயில் முகவரி: mathpattam@gmail.com

# பெர்லின் டிரா தெரியுமா?

செஸ் விளையாட்டுகளில் பெரும்பாலான ஆட்டங்கள் 'ஸ்டேல்மேட்' (Stalemate), 'போதுமான காய்கள் இல்லாமை' (Insufficient material), 'பரஸ்பர ஒப்புதல்' (Mutual agreement) உள்ளிட்ட காரணங்களால் டிராவில் முடிவடைவதைப் பார்த்திருப்போம். அதிக நேரம் விளையாடப்படும் ஆட்டங்களில் இதுபோன்று நடப்பது சகஜம் தான்!

ஆனால், வேண்டுமென்றே ஆட்டத்தை டிரா செய்யவும் ஒரு வழி இருக்கிறது, தெரியுமா?

அதற்கு, இரு அணி வீரர்களும் ஒரே நகர்வுகளைத் தொடர்ந்து மூன்று முறை நகர்த்தினால் போதும். நடுவர்களால் ஆட்டம் 'டிரா' என அறிவிக்கப்படும்.

பெர்லின் டிரா விளையாடிய குகேஷ் மற்றும் கார்ல்சன்




அப்படியான ஒரு டிரா வகை தான் இந்த 'பெர்லின் டிரா'.

பெர்லின் டிராவானது கீழ்க்கண்ட நகர்வுகளை வரிசையாகப் பின்பற்றுகிறது:

1. e4 e5
2. Nf3 Nc6
3. Bb5 Nf6

...

...

11. Qe4+ Qe6
12. Qd4 Qd6
13. Qe4+ Qe6
14. Qd4 Qd6

### சமீபத்தில் ஆடப்பட்ட பெர்லின் டிரா!

ஜூலை மாதத் தொடக்கத்தில் நடந்தது 'சூப்பர் யுனைடெட் ரேபிட் & பிளிட்ஸ் குரோஷியா 2025' (SuperUnited Rapid & Blitz Croatia 2025) போட்டி. அதில், 'பிளிட்ஸ்' ஆட்டம் ஒன்றில் குகேஷும், மேக்னஸ் கார்ல்ஸனும் மோதினார்கள்.

இருவருக்குத் தலா ஐந்து நிமிடங்கள் என்ற அடிப்படையில் நடைபெற்ற அந்த ஆட்டத்தில், 1.e4 e5, 2.Nf3 Nc6, 3. Bb5 Nf6 என, ஓப்பன் பெர்லின் டிபென்ஸை ஆடத் தொடங்கினார்கள்.

தொடர்ச்சியாக பெர்லின் டிஃபென்ஸை இருவரும் ஆட, 'ரிபிடிடிவ் மூவ்' (Repetitive move) மூலம் ஆட்டத்தை டிரா செய்தனர். ஒரு நிமிடம் கூட அந்த ஆட்டம் நீடிக்கவில்லை. சரியாக, பதினான்காவது மூவில் ஆட்டம் 'டிரா' என அறிவிக்கப்பட்டது.

அப்போது குகேஷுக்கு 5.10 நிமிடங்களும், கார்ல்ஸனுக்கு 4.46 நிமிடங்களும் மீதம் இருந்தன.

கோப்பைத் தனக்குக் கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டதால், அவ்வாறு விளையாடியதாகப் பேட்டிக் கொடுத்திருந்தார் கார்ல்சன்!